நாள்: 23.02.2026

O.S. No. 38/2023

வா.சா.1

பெயர்: சுரேஷ் , த/பெ. தங்கையன்

2, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் என்ன படித்துள்ளேன் என்றால் Diploma EEE படித்துள்ளேன். நான் வேலையில் உள்ளேனா என்றால் Computer Service Center வைத்துள்ளேன். என் சகோதரி அனுசியா என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் மாற்றுதிறனாளியாக உள்ளார். என் தாயாரோடு 3/22/19 கதவுஎண் கொண்ட தாவா வீட்டில் வசித்துவருகிறார்.என் உடன் பிறந்த சகோதரர் என்ன வேலை செய்கிறார்என்றால் வேலை செய்துவருகிறார். எனக்கும் எனது சகோதரர் வினோத்திற்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். நானும் எனது சகோதரரும் கதவுஎண். 3/232 தியாகராஜன் நகரில் குடியிருந்துவருகிறோம் என்றால் சரிதான். நான் கீழ்போஷனிலும் என் சகோதரர் மேல் போஷனில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். என் சகோதரி அனுசியா 3/22/19 கதவுஎண் கொண்ட வீட்டில் தனியாகதான் வசித்துவருகிறார் என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீடு என் தாயார் பெயரில் வாங்கி கட்டப்பட்டது என்றால் சரிதான். என் பிறந்த தேதி என்ன என்றால் 23.05.1980 ஆகும். என் பெற்றோருக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1979 ல் திருமணம் ஆனது. என் பெற்றோருக்கு பூர்வீகம் எந்த ஊர்என்றால் என் தந்தைக்கு திருவாரூர் மாவட்டம் விளமல் கிராமம், என் தாயாருக்கு நாகப்பட்டினம் மாவட்டம்

மயிலாப்பூர் கிராமம் ஆகும். என் பெற்றோர்கள் திருமணத்திற்கு முன்பு உறவினர்களா என்றால் தூரத்து உறவினர்கள் ஆகும். என் தாயாருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என் தாயாரை சேர்த்து 4 சகோதரிகள் 2 சகோதரர்கள்.

என்தாயார் கமலாவிற்கு பூர்வீக கிராமத்தில் பூர்வீக சொத்து உள்ளதா என்றால், என் தாயாரின் அம்மாவிற்கு உண்டு. என் தாயருக்கு கிடையாது. என் தாயருக்கு அவரது பெற்றோர் வீட்டிலிருந்து பாகம் எதுவும் கிடைத்ததா என்றால் பசுமாடு கொடுத்துள்ளார். என்தாயார் திருமணத்தின் போது சீர்வரிசையாக மாடு கொடுக்கப்பட்டதா அல்லது திருமணத்திற்கு பிறகு கொடுக்கப்பட்டதா என்றால் திருமணத்திற்கு பிறகு கொடுக்கப்பட்டது தான். என் தகப்பனாரின் (1ம் பிரதிவாதி) சகோதரர் இளங்கோவன் தாவா கிராமத்தில் வசித்துவருகிறாரா என்றால் தாவா கிராமத்தில்தான் வசித்துவருகிறார். மேற்படி இளங்கோவன் பஞ்சாயத்து வார்டு உறுப்பினராக இருந்தாரா என்றால் முன்பு இருந்தார். எனக்கும் எனது சித்தப்பா இளங்கோவனுக்கும் இடையே நல்ல உறவுதான் என்றால் சரிதான்.

வழக்கு சொத்திற்கு வடபுறமாகவும் கீழ்புறமாகவும் புலஎண்.470/6 ல் 1 ஏக்கர் 60 சென்ட் நிலமும் அதற்கு சற்று வடக்கே புலஎண்.470/1 ல் 33 சென்ட் நிலமும் உள்ளது என்றால் சரிதான். புலஎண்.470/6 மற்றும் 470/1 ஆகியவை மலேசியாவில் உள்ள காமாட்சி என்பவருக்குசொந்தமானது என்றால் சரிதான். புலஎண் 470/6 மற்றும் 470/1 ஆகிய சொத்துகளில் என் தாயார் சட்டத்திற்கு புறம்பாக அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ததாக மேற்படி காமாட்சி என்பவரால் புகார் அளிக்கப்பட்டிருந்தது என்றால் என் தாயார் மேற்படி சொத்துகளில் குடியிருந்து காமாட்சி சொல்லி சாகுபடி அனுபவம்

செய்துவந்தார். ஆனால் நாங்கள் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பதாக திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்திருந்தார். மேற்படி புகார் மனுவில் என் தாயாருக்கு அனுபவ சான்று எதுவும் கொடுக்ககூடாது என்று கோரியிருந்தாரா என்றால் இல்லை.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள WP No. 20844/2023 வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் RTR பதிவிற்கு எதிராக காமாட்சியால் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நீதிபேராணை மனுவில் இந்த வழக்கின் வாதிகளான 2 முதல் 4 நபர்களும் 1 ம் பிரதிவாதியான தங்கையனும் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். நாளது வரை மேற்படி நீதிபேராணை மனு நிலையில் உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் 30.04.1986 நன்னிலம் வட்ட கூட்டுறவு சங்கத்தில் எழுத்தராக பணியில் சேர்ந்தார் என்றால் வேலையில் இருந்தார் என்பது தெரியும். என்ன வேலையில் இருந்தார் என்று தெரியாது. மேற்படி கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக பணிஉயர்வு பெற்று 31.10.2016 ல் பணி ஓய்வு பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்திற்கும் என் தகப்பனாருக்கும் இடையே சுமூக உறவு இருந்ததா என்றால் எனக்கு விபரம் தெரிந்த 2000 ம் ஆண்டு முதல் எங்கள் குடும்பத்திற்கும் என் தகப்பனாருக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை. 2000 ஆம் ஆண்டிற்கு முன்பு எங்களுடன் தான் என் தகப்பனார் வசித்துவந்தார் என்றால் சரிதான். எப்போதிலிருந்து என் தகப்பனார் எங்கள் குடும்பத்தை விட்டு முழுமையாக பிரிந்து சென்றார் என்றால் 2003 லிருந்து தொடர்பில்லை. என் தகப்பனாருக்கு நன்னிலத்தில் மற்றொரு குடும்பம் உள்ளதா என்றால் உள்ளதாக சொல்வார்கள்

நான் பார்த்ததில்லை. எப்போதிலிருந்து என் தகப்பனார் நடவடிக்கை சரியில்லை என நான் தெரிந்துகொண்டேன் என்றால் நான் 6 ம், 7 ம் வகுப்பு படிக்கும்போதிலிருந்தே தெரிந்துகொண்டேன்.

என் சகோதரியான 3 ம் வாதி அனுசியா எப்போது பிறந்தார் என்றால் 1982 அல்லது 1984 ஆகும். 4 ம் வாதியான எனது சகோதரர் வினோத் எப்போது பிறந்தார் என்றால் 1986 - 87 ல் பிறந்தார். என் தாயாருக்கு என் தகப்பனார் நன்னிலத்தில் மற்றொரு குடும்பம் வைத்திருந்து விபரம் தெரியுமா என்றால் நான் சொல்லி தெரியும். மேற்படி மற்றொரு குடும்பம் வைத்தது தொடர்பாக எங்கள் குடும்பத்தில் என் தகப்பானருக்கு இடையே எப்போதிலிருந்து பிரச்சனை வந்தது என்றால் நான் 6 ம் ,7 ம் வகுப்பு படிக்கும்போதிலிருந்தே பிரச்சனை ஏற்ப்பட்டுவந்தது. மேற்படி பிரச்சனை தொடர்பாக என் தாயரின் உறவினர்கள் பேச்சுவார்ததை நடத்தியுள்ளார்களா என்றால் நடத்தியுள்ளார்கள். மேற்படி உறவினர்களின் பேச்சுவார்ததையில் என்ன முடிவு ஏற்ப்பட்டது என்றால் உறவினர்கள் கண்டித்தார்கள். தொடர்ந்து என் தகப்பனார் எங்கள் குடும்பத்தோடுதான் வசித்துவந்தார். மத்தியஸ்த்திற்கு பிறகு றேம்படி உறுதிமொழி பத்திரம் வா.சா.ஆ.2 ஏற்பட்டதா என்றால் யாருடைய வற்புறுத்தலும் இல்லாமல் மத்தியஸ்திற்கு பிறகு அவராகவே எழுதிகொடுத்தது. மத்தியஸத்தில் இனி தவறு ஏதும் செய்யமாட்டேன் என என் தகப்பனார் சொல்லியதால் ஏற்றுகொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தை அடிப்படையாக கொண்டு பதிவு ஆவணம் எதுவும் ஏற்படுத்திகொள்ளவில்லை என்றால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை.

வா.சா.ஆ.1 ஆவணத்தை எனக்கு யார் கொடுத்தார் என்றால் நான் நகல் போட்டு RTR வழக்கிற்காக வாங்கினேன்.வா.சா.ஆ.1ஆவணத்தை RTR வழக்கிலும் சமர்ப்பித்துள்ளேனா என்றால் சமர்ப்பித்துள்ளேன். வா.சா.ஆ. 1 ஆவணத்தை RTR வழக்கிற்கு கொடுத்ததற்கு ஆதரவாக நீதிமன்ற முத்திரை எதுவும் இல்லை என்றால் அது தொடர்பாக எனக்கு தெரியாது. தாவா சொத்துகளுக்கு என் தாயார் பெயரில் உரிமை கோருவதற்கு வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாச.ஆ.2 ஆவணம் உரிய முத்திரை கட்டணம் செலுத்தப்படாத காரணத்தாலும் பதிவு செய்யப்படாத காரணத்தாலும் இந்நீதிமன்றத்தால் ஏற்புடையதல்ல என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 2 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துகளுக்கு என் தாயார் பெயரில் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் முதல் 4 வரிகள் நெருக்கமாகவும் இதர வரிகள் சமமான இடைவெளி கொடுத்தும் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சாஆ. 2 ஆவணத்தை அனுசரித்து என் தாயார் பெயரில் பட்டா பெயர் மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்துகளுக்கான மூல ஆவணம் எதுவும் என் தாயார் வசம் கொடுக்ப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் என் தகப்பனாரால் எழுதிகொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் விவசாய கடன் பெறுவதற்காக என் தாயார் எழுதி கொடுத்த அடமான பத்திரம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் 3 அயிட்ட சொத்துகள்

காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படிப 3 அயிட்ட சொத்துகளுக்கும் என் தாயார் பெயரில் உரிமை மூலம் கிடையாது என்றால் சரிதான். சாகுபடி தாரர் என்ற அடிப்படையில் என்தாயருக்கு அடமான கடன் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 முதல் 19 ஆவணங்கள் என் தாயர் சாகுபடிதாரர் என்ற அடிப்படையில் பயிர் காப்பீடு செய்ததற்கும், நிவாரணம் பெற்றதற்கும், விவசாய கடன் பெற்றதற்கும் ஆதரவு ஆவணங்கள் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.20 கிஸ்தி ரசீதில் என் தாயார் பெயர் உரிமையாளர் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். செலுத்துபவராக குறிப்பிடப்பட்டுள்ளது. என் தாயார் தியாகராஜ நகரில் எங்களுடன் குடியிருந்து வந்து எப்போது தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக கூறுகிறேன் என்றால் 2018 லிருந்து குடியிருந்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் குடும்ப அட்டை நகல் எங்கள் குடும்பத்துடையதுதான் என்றால் சரிதான்.( **1998 - 2003 குடும்ப அட்டை முதல் பக்க நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி குடும்ப அட்டையில் கண்ட கதவிலக்கம் 66C, விளமல், தண்டலை முகவரியில் என் தாயார் மற்றும் குடும்பத்துடன் குடியிருந்துவந்தோம் என்றால் சரிதான். விளமல் வடக்குத் தெரு ஆகும். நாங்கள் தியாகராஜன் நகருக்கு குடி செல்வதற்கு முன்பு அங்கு குடியிருந்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது எங்கள் குடும்பத்தின் 2005 - 2009 காலத்திற்கான குடும்ப அட்டை என்றால் சரிதான். (**2005 – 2009 குடும்ப அட்டை முதல் பக்க நகல் பி.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) புலஎண். 470/6 சொத்திற்கு மேற்கே சௌவிக் நகர் உள்ளது என்றால் இல்லை. புலஎண்.470/7 க்கு மேற்கே உள்ளது.

புலஎண்.470/6 க்கு மேற்காக என்ன உள்ளது என்றால் சாகுபடி செய்யாத காலி வயல் உள்ளது. தாவா சொத்து விபரத்தில் கண்ட குடியிருப்பு வீடு மேற்படி சௌவிக் நகருக்கு உட்பட்டது அல்ல என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்து விபரத்தில் கண்ட குடியிருப்பு வீடு என்ன மாதிரியானது என்றால் தகர ஷீட் கூரை கொண்ட கூரைவீடு. மேற்படி குடியிருப்பு வீட்டின் நீள, அகலம் எவ்வளவு என்றால் சுமார் 30 X 20 இருக்கலாம். மேற்படி குடியிருப்பு வீட்டின் தன்மையை உறுதி செய்ய இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டின் புகைப்படமோ வீடியோ ஆதாரமோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

மேற்படி குடியிருப்பு என்பது குடியிருப்புக்கு லாய்கற்ற கட்டுமானம் என்றாலும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஷெட் என்றாலும் என் சித்தப்பா இளங்கோவன் வார்டு உறுப்பினராக இருந்த காரணத்தால் அவரது செல்வாக்கை பயன்படுத்தி வா.சா.ஆ. 21, 22, 26 ஆகிய ஆவணங்கள் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாயார் அவரது கடைசி காலம் வரை என்னுடன் தான் தியாகராஜன் நகர் வீட்டில் வசித்துவந்தார் என்றாலும் என் சகோதரி என்னுடன் வசித்துவருகிறார் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.30 ஆவணத்தில் கதவுஎண் மற்றும் தெரு பெயர் ஆகியவை அடித்தல் திருத்தலோடு உள்ளது என்றால் சரிதான். கணினி பதிவில் சரி செய்து கொள்வதற்காக கைப்பட திருத்தம் செய்யப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.30 ஆவணம் இவ்வழக்கு சொத்திற்குரியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 33 ஆவணத்தில் என் தாயார் பெயர் மட்டும்தான் உள்ளது என்றாலும் அதன் முதல் பக்கம் இல்லை என்றாலும் சரிதான்.

மேற்படி வா.சா.ஆ.33 ஆவணத்தில் 2008 லிருந்து தான் பதிவுகள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 34 ஆவணத்தில் 13.08.2020 முதல் பதிவுகள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துகளை 1992 ல் என் தாயார் கிரயம் வாங்கியதற்கான பொருளாதார ஆதரவு குறித்து நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மட்டும்தான் உள்ளது என்றால் தனிப்பட்ட முறையில் தனிநபர் வீடுகளுக்கும் பால் வியாபாரம் செய்து என் தாயார் வருமானம் ஈட்டிவந்தார். வா.சா.ஆ. 27 வில்லங்க சான்றிதழில் வரிசை எண் 4 லில் என் தகப்பனார் தாவா சொத்தான புலஎண்.470/7 ல் சொத்தினை திருவாரூர் மகா ஏஜென்ஸீஸிடம் அடமானம் வைத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடனை என் தகப்பனார் எதற்காக வாங்கினார் எப்போது தீர்க்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

தாவா சொத்துகள் என் தகப்பனாரால் 2, 4 பிரதிவாதிகளுக்கு பகுதி பகுதியாக விற்பனை செய்யப்பட்டுவிட்டது குறித்தும் அதன் பெயரில் தாவா சொத்துகளுக்கு 2, 4 பிரதிவாதி பெயரில் பட்டா மாறுதல் ஏற்ப்பட்டது குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வருவாய் துறையில் நான் ஆட்சேபனை செய்துள்ளேன். தாவா சொத்துகளை 2, 4 பிரதிவாதிகளுக்கு என் தகப்பனார் விற்பனனை செய்ததற்கு பிறகு என் தாயார் பெயரில் சாகுபடிக்கான அடங்கலோ, அனுபவ சான்றோ வழங்கப்படவில்லை என்றால் சரிதான். சாகுபடியை மட்டும் பதிவு செய்துகொண்டுள்ளார்கள்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது **பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2**--- வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S
Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.02.23 18:46:34 +0530